பங்கேற்போம் !  உரிமையை நிலைநாட்டுவோம் !

ARUNODHAYA Children Sangam

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு

# சிட்டெறும்பு பேசுது

*தனிச் சுற்றுக்கு மட்டும்

உயிர் : 02
குரல் : 03

ஜூலை 2024 – செப்டம்பர் 2024




## வாங்க
## போதையில்லா உலகத்தை
## உருவாக்கலாம்

அருணோதயா
குழந்தை தொழிலாளர் மையம்

# சிட்டெறும்பு பேசுது

உயிர் : 02 | குரல் : 03

ஜீலை – செப்டம்பர் 2024



ஆசிரியர்கள்

L. யுவராணி, H.யுவஸ்ரீ

இணை ஆசிரியர்கள்

S. ஜிஷ்னு, K. நிஷாந்த், G. விநாயகமூர்த்தி

உதவி ஆசிரியர்கள்

G. லட்சுமிபிரியா, M. சுஹாசினி. P. தமிழ், S. லோகேஷ், V. சுஜிதா, S. தங்கவித்யா, S.சக்தி முருகன், R. கன்னியம்மா, M. யுவராஜ்,

நிருபர்கள்

S. நிவிஸ், A. ஹேமன், V. நாகராணி, S. ஓவியா, D. ரொபினா, M. ஜெனிலியா S. தங்கவித்யா, S.சக்தி முருகன், R. கன்னியம்மா, M. யுவராஜ்,

ஓவியர்கள்

C. ஜெகன், S. ராயின் V. நாகராணி, R. தேவன்

நிர்வாகம்

முனைவர்.வர்ஜில் டி சாமி
நிர்வாக இயக்குநர்

ஒருங்கிணைப்பு

திருமதி. செ. செல்வி
குழந்தை பங்கேற்பு கருத்தியல் வழிநடத்துனர்

வழி நடத்துனர்

திரு. K. சுரேஷ், விதை நெல் உறுப்பினர்

வடிவமைப்பு

ஆசிரியர் குழு, D. டான்போஸ்கோ,



தொடர்பு முகவரி

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்
19/9/2, பஜார் தெரு. இராயபுரம்
சென்னை – 600013
**Phone** : 044–42632264
**Mobile** : 9444051529, 8925274527

மின்னஞ்சல்

arunodhayaorg@gmail.com

இணையதளம்

www.arunodhayacentre.in




## ஆசிரியர் உரை

**அன்பு நண்பர்களே வணக்கம் !!**

**மீண்டும் உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்சி...**

தொடர்ந்து சிட்டெறும்பு பேசுது வெளிவர நீங்கள் கொடுக்கும் ஒத்துழைப்பிற்கு மனமார்ந்த நன்றி...

இந்த முறை நாம் திட்டமிட்டபடி நமக்கு ஆபத்து விளைவிக்கும், நம் நல்வாழ்வினை சீரழிக்கும், மிக ஆபத்தான மது மற்றும் பொருட்கள் மீதான அடிமையாதல் என்ற பிரச்சனையை கையில் எடுத்து அது குறித்த நம் கருத்துக்களையும், எண்ணங்களையும் திரட்டி சிட்டெறும்பு பேசுது மூலம் சமூகத்திற்கும் மற்ற குழந்தைகளுக்கும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளோம்...

அதற்க்கேற்றவாறு உங்கள் படைப்புகள், கவிதைகள், கட்டுரைகள், உண்மை சம்பவங்கள், சிறுகதைகள், வண்ண ஓவியங்கள் அனைத்தும் மிக அருமையாக புத்தகத்தை படிப்போருக்கு விழிப்புணர்வையும் நற்சிந்தனையும் ஏற்படுத்தும் வண்ணம் அமைத்துள்ளது சிறப்பு....

குழந்தைகளை போதை என்ற அரக்கனிடம் அடிமையாகாமல் காக்கும் பொறுப்பு குடும்பம், சமூகம், பள்ளி மற்றும் அரசு போன்ற நிறுவனங்களில் உள்ள அனைவருக்கும் உள்ளது. பள்ளிக்கு அருகாமையில் குழந்தைகளின் கருத்தை கவரும் வண்ணம் மிட்டாய் போன்ற வடிவங்களில் போதை பொருள் விற்கப்படுவது கண்காணிக்கப்பட வேண்டும். மதுக்கடைகள் பள்ளிக்கு அருகாமையில் தடைசெய்ய வேண்டும். அரசு கடுமையான சட்ட திட்டங்களை இயற்றி அவற்றை தீவிரமாக நடைமுறைப்படுத்தி குழந்தைகளை பாதுகாக்க ஆவன செய்ய வேண்டும்.

**சரி ! போதையை ஒழிப்பதில் குழந்தைகளாகிய நம் பங்கு என்ன ?**

நம் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் உறுப்பினராக உள்ள அனைத்து குழந்தைகளும் இன்றே ! இப்போதே ! போதைக்கு அடிமை ஆகமாட்டோம் என்ற உறுதி மொழியை எடுத்துக் கொள்வோம். மற்ற குழந்தைகளையும் உறுதிமொழி எடுக்க வழிவகை செய்வோம்.

**ஆம் நண்பர்களே !!**

வடசென்னையை சேர்ந்த குழந்தைகள் என்றாலே பல வித பழக்கத்திற்கு உள்ளானவர்கள் என்ற முத்திரைக்கு ஆளாகி உள்ள நிலைமையில், போதை என்ற அரக்கனை இந்த நகரத்தை விட்டே விரட்டி அடித்து நாம் நன் மதிப்பை பெறுவோம்.

**ஒன்றிணைவோம் !**

**போதையில்லாத சமுதாயத்தை உருவாக்குவோம் !!**



**H. யுவஸ்ரீ**
11 ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை

# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயல்பாடுகள்


(ஜீலை - செப்டம்பர் 2024)

## குழந்தைகள் சங்க கூட்டங்கள்

| மாதம் | பேசப்பட்ட கருத்துக்கள் |
|---|---|
| ஜூலை | கும்பகோணம் தீ விபத்து நினைவேந்தல், செயற்குழுகூட்டம், குழந்தைகள் சங்க கூட்டமைப்பு தேர்தல், குழந்தைகள் சங்க மாநாடு திட்டமிடல், டாக்சிக்டூர், காலாண்டு தேர்வு வருவதால் குழந்தைகள் அனைவரும் தொடர்ந்து பள்ளிக்கு செல்லவேண்டும். சிறந்த முறையில் தேர்வு எழுத வேண்டும் என்பது குறித்து பேசப்பட்டது. |
| ஆகஸ்ட் | சிட்டெறும்பு பேசுது இதழ் (ஏப்ரல்-ஜூன்) பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல் , நகரசபை கூட்டம், குழந்தை வார்டு பிரதிநிதிகள் கூட்டம், கேரளாவில் உள்ள வயநாட்டில் நடைபெற்ற நிலச்சரிவு குறித்தும், பகுதியளவில் சுதந்திர தினவிழா கொண்டாடுவது குறித்தும் பேசப்பட்டது. |
| செப்டம்பர் | சிட்டெறும்பு பேசுது அடுத்த இதழுக்கான செய்திகள் தயாரித்தல், வீடியோ ஆவணப்பயிற்சி, குழந்தைகள் சங்க மாநாடு திட்டமிடல். |

### குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயற்குழு கூட்டம்

குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயற்குழு கூட்டம் 17 ஜூலை 2024 அன்று நேரடியாகவும், 26 ஜூலை 2024 அன்று ஆன்லைன் மூலமாகவும் நடைபெற்றது. தேர்தலுக்கான தயாரிப்புகள் குறித்து பேசப்பட்டது. இதில் செயற்குழு உறுப்பினர்கள் தேர்தல் ஆணையமாக பொறுப்பேற்று பொறுப்புகளை பிரித்து கொண்டனர்.




### குழந்தைகள் சங்க கூட்டமைப்பு தேர்தல்

குழந்தைகள் சங்க கூட்டமைப்பு தேர்தல் 28 ஜூலை 2024 அன்று நடைபெற்றது. தேர்தல் ஆணையம் சிறப்பாக செயல்பட்டு தேர்தலை ஜனநாயக முறைப்படி நடத்தி புதிய உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய செயற்குழு உறுப்பினர்கள் உறுதி மொழி ஏற்று தங்கள் பதவியை ஏற்று கொண்டனர். இதில் 90 குழந்தைகள் கலந்து கொண்டனர். குழந்தைகள் சங்க மாநாடு திட்டமிடல் குறித்து பேசி முடிவெடுக்கப்பட்டது.



## குழந்தைகள் நகரசபை

குழந்தைகள் நகரசபை கூட்டத்தின் தயாரிப்பாக ஆகஸ்ட் மாதம் 10, 11 ஆகிய தேதிகளில் வார்டு குழந்தைகள் பிரதிநிதிகள் கூட்டம் 10 வார்டுகளில் நடைபெற்றது. இதில் 60 குழந்தைகள் கலந்து கொண்டனர். வார்டில் உள்ள குழந்தைகளிடம் பெறப்பட்ட கோரிக்கைகளை தொகுத்து எழுதினார்கள், மேலும் குழந்தைகள் நகரசபை கூட்டங்கள் குறித்த திட்டமிடல் நடைபெற்றது.



ஆகஸ்ட் 15 அன்று குழந்தைகள் நகரசபை கூட்டம் 10 வார்டுகளில் நடைபெற்றது. மொத்தம் 800 குழந்தைகள் கலந்து கொண்டனர். பகுதி தலைவர்கள், சுயஉதவி குழுவினர், மாமன்ற உறுப்பினர்கள், போன்றவர்கள் கலந்து கொண்டு குழந்தைகளின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

முன்னாள் கொடுத்த கோரிக்கைகளில் நிறைவேறிய கோரிக்கைகளுக்கு குழந்தைகள் நன்றி கூறினார்கள்.

## பள்ளி குழந்தைகள் மன்றம்

ஆகஸ்ட் மாதம் பள்ளி குழந்தைகள் மன்ற கூட்டம் 11 பள்ளிகளில் நடை பெற்றது. 330 குழந்தைகள் கலந்து கொண்டனர். புதிய பள்ளி குழந்தைகள் மன்றம் உருவாக்கப்பட்டது. ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் ஒத்துழைப்பு அதிகமாக இருந்தது.

## பயிற்சிகள்

ஜீலை மாதம் 14 அன்று டாக்சிக்டுர் நடைபெற்றது. இதில் 21 குழந்தைகளும், 2 பணியாளர்களும் கலந்து கொண்டனர். சென்னை கிளை மேட் ஆக்சன்ல் இருந்து இரண்டு தன்னார்வலர்கள் கலந்து கொண்டு எண்ணூர், திருவொற்றியூர், கொருக்குப்பேட்டை பகுதிகளில் உள்ள சுற்றுச் சூழல் மாசு அடையக் கூடிய தொழிற்சாலைகள், பக்கிங்காம் கால்வாய் போன்றவையும் அதனால் ஏற்படும் மாசு குறித்து குழந்தைகளுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

செப்டம்பர் 30, அக்டோபர் 1 ஆகிய தேதிகளில் குறும்படம் தயாரிப்பு பயிற்சி குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்டது. இதில் 19 குழந்தைகள் 4 பணியாளர்கள் கலந்து கொண்டனர். திரு.ஷரிப், திரைப்பட இயக்குநர் பயிற்சியாளராக இருந்து வழிநடத்தினார். கதை சொல்லும் புகைப்படம் எடுப்பது, குறும்படம், ஆவணப்படம், ஒளிப்பதிவு, சினிமாடோகிராபி, எடிட்டிங், டைரக்சன், போன்றவை குறித்து விரிவாக குழந்தைகளுக்கு கற்று கொடுக்கப்பட்டது. இதன் தாக்கமாக குழந்தைகள் ஒரு குறும்படத்தை தயாரித்து உள்ளனர்.






## சுதந்திர தின விழா

ஆகஸ்ட்15 அன்று எண்ணூர், கொருக்குப்பேட்டை, திருவொற்றியூர், இராயபுரம் ஆகிய பகுதிகளில் சுதந்திர தின விழா கொண்டாட்டங்கள் நடைபெற்றது. கொடியேற்றி இனிப்புகள் வழங்கி, சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.

## விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

ஜீலை 16 அன்று கொருக்குப்பேட்டை, திருவொற்றியூர், எண்ணூர், இராயபுரம் மண்டலங்களில் கும்பகோணம் தீ விபத்து குறித்து மெழுகுவத்தி ஏற்றி நினைவேந்தல் அனுசரிக்கப்பட்டது. இதில் 200 க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டு குழந்தைகள் பாதுகாப்பு குறித்து பகுதியளவில் விழிப்புணர்வு அளித்தனர்.

திருவொற்றியூர் பகுதியில் ஆகஸ்ட் 15 ம் தேதி மரம் நடும் விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் பெற்றோர்கள் 20, இளைஞர்கள் 8, பகுதி தலைவர்கள்.-2, குழந்தைகள் 25 என மொத்தம் 55 பேர் கலந்து கொண்டனர். வீட்டுக்கு வீடு மரம் நடவேண்டும், பகுதியை சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென பகுதி மக்களுக்கு விழிப்புணர்வு அளித்தனர்

## பிற நிகழ்வுகள்

செப்டம்பர் 28 அன்று மெய்யழகன் சினிமா Preview theatreல் பார்க்கும் வாய்ப்பு அகரம் அமைப்பு மூலம் கிடைத்தது. மெய்யழகன் படம் குழந்தைகளுக்கு தமிழர்களின் வீரம், அடையாளம், வரலாறு மற்றும் பண்புகள் பழைய கலாச்சாரங்கள் போன்றவற்றை நினைவு படுத்தியது மிகவும் சிறப்பாக இருந்தது. குழந்தைகளும் எங்களுக்கு இப்படி சினிமா பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது இல்லை, மிகவும் சந்தோசமாக இருந்தது என்று கூறினார்கள்.








**H. யுவஸ்ரீ**
11 ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை





# நம்மை அழிக்கும் போதையை நாம் அழிப்போம்

“போதையால் தாழ்வே வரும் போதை இல்லா வாழ்வே வரம்” என்ற வரிகளுக்கு ஏற்ப மனிதன் வெறுத்து ஒதுக்க வேண்டியவற்றுள் மிக முக்கியமான ஒன்று போதைப் பழக்கம் ஆகும். போதை பொருள்களால் தனி மனித வாழ்வு சீரழிவதோடு நாட்டின் பொருளாதாரமும் சீர்குலைகிறது. இதன் காரணமாக சமூகத்தில் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுவதோடு மட்டுமல்லாது குற்றங்களும் நிகழ்கின்றன. போதை பொருள் தீமைகள் பற்றி காண்போம். போதை பொருட்கள் போதை ஏற்றிக் கொள்வதற்காகவும், பொழுது போக்கிற்காகவும் உட்கொள்ளப்படுகின்றன. போதைப் பழக்கம் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் ஒன்றாகும். போதை பொருட்கள் என்கின்ற போது அதனுள் பல அடங்குகின்றன. அந்த வகையில் மதுபானம், புகையிலை, அபின். ஹெராயின், கஞ்சா, பான்மசாலா, போதை தரும் இன்ஹேலர்கள் என பலவும் அடங்கும்.

### போதையினால் ஏற்படும் உடல் பாதிப்புகள்

“மேதையை அழிக்கும் போதை” என்ற வரிகளுக்கு ஏற்ப மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் கல்வியை பெரிதும் பாதிக்கிறது. உலக அளவில் தற்போது போதை பொருள் மிகவும் கடுமையான சுகாதார பிரச்சனையாக உள்ளது. இத்தகைய பழக்கங்களுக்கு ஆளானவர்களுக்கு நாளடைவில் மூச்சுத் திணறல், சளி, இருமல் போன்ற பிரச்சனைகள் ஏற்படுவதோடு உணவுக் குழாயிலும், கணையத்திலும், கல்லீரலிலும் பாதிப்பு ஏற்படுகிறது. சரியாக உணவு எடுத்துக் கொள்ள முடியாமல் போவதால் வயிற்றுப்புண், எடை குறைவு, நோய் எதிர்ப்பு சக்திகுறைவு, உடல் சோர்வு போன்ற பிரச்சனைகள் ஏற்படுகிறது. இதைத் தொடர்ந்து மூளையில் ஏற்படும் பாதிப்புகளால் தானாகவே பேசிக் கொள்வது, பயம், மனசோர்வு, மனகுழப்பம் போன்ற பிரச்சனை உண்டாகிறது மேலும் கல்லீரல், சிறுநீரகம், இதயம் சார்ந்த பிரச்சனைகளும் கொலஸ்ட்ரால், நீரழிவு, ரத்த அழுத்தம் சார்ந்த பிரச்சனைகளும் உண்டாகிறது.

### போதையை அழிப்பதில் குழந்தைகள், இளைஞர்கள், பெற்றோர்களின் பங்கு

போதைப் பழக்கத்திற்காளானவர்கள் எதையும் செய்யத் துணிந்தவர்களாகவே காணப்படுகின்றனர். குழந்தைகள், இளைஞர்கள் ஆகியவர்கள் பொறுப்புடன் செயல்படுவதன் மூலமே எதிர் காலத்தை சிறப்பாக மாற்ற முடியும். பெற்றோர்கள் பிள்ளைகளை அரவணைத்து அவர்களின் தவறுகளை எடுத்துக் கூறி பழக்கத்திலிருந்து சிறிது சிறிதாக அவர்களை வெளிக் கொண்டுவர வேண்டும். பிள்ளைகளை கண்காணிக்க வேண்டும். அவர்களின் சிறிய மாற்றம் ஏற்படும் போது அதனை கவனித்து சரி செய்ய வேண்டும். ஒருவர் போதை பொருளுக்கு அடிமையாகி விட்டால் அதிலிருந்து அவர்மீள்வது அவசியம். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அவரை மீண்டெழ செய்வது அவசியமான ஒன்றாகும். முதலில் போதை பொருட்களுக்கு அடிமையான தனிமனிதன் ஒவ்வொரு வரும் அதன் தீமைகளை உணர்ந்து பழக்கத்தில் இருந்து மீண்டுவர வேண்டும் என முழுமனதாக உறுதி கொள்ள வேண்டும்.

போதை பொருட்கள் என்பது தனி மனிதன் மட்டுமல்ல சமுதாயத்தையும் தாண்டி நாட்டிற்கு கேடு விளைவிக்கும். போதை என்பது ஒருநோய், அந்த நோய்க்கான மருத்துவத்தினை பெற்றால் போதை நோயை குணப்படுத்த முடியும். போதை பொருள் எடுப்பவர்களுக்கு மறுவாழ்வு மையங்கள், ஆயுர்வேதா, சித்தா என எத்தனையோ மருத்துவ வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றை கண்டறிந்து மருத்துவத்தினை மேற்கொள்ள வேண்டும். ஆரோக்கியமான வாழ்விற்கு போதை பொருட்கள் பெரிதும் தடையாக உள்ளது என்பதனை அனைவரும் உணர வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் உள்ளத்தில் நற்சிந்தனைகளை ஏற்படுத்தி சீர் செய்வதே ஆரோக்கியமானதும் நிரந்தரமானதுமான தீர்வாகும்.

**S. தர்ஷன்**
9ஆம் வகுப்பு. காசிகோயில் குப்பம், எண்ணூர்



# கோபியின் கதை

(கோபி எட்டாம் வகுப்பு படித்து வந்தான். அவன் ஒரு நாள் வீட்டில் படித்துக் கொண்டிருந்தான். அவன் அம்மா அருகில் உள்ள அறையில் துணி தைத்துக் கொண்டிருந்தார்).

**அப்பா:** கோபி !கோபி !அம்மா எங்கே?

**கோபி:** அம்மா பக்கத்து ரூமில் துணிதைத்துக் கொண்டிருக்கிறார் .

**அப்பா:** சரிடா ! நான் போய் பார்க்கிறேன்.

**அப்பா:** சுவாதி என்ன பண்ற !!

**அம்மா:** பார்த்தா தெரியலையா ? துணி தைச்சிட்டு இருக்கேன்.

**அப்பா:** சுவாதி எனக்கும் சரியான வருமானம் இல்லை, உனக்கும் சரியான வருமானம் இல்லை, ரொம்ப கஷ்டமா இருக்கு குடும்பம் நடத்துவதற்கு. கொஞ்ச நாளைக்கு நம்ம பையன் கோபிய வேலைக்கு அனுப்பலாமா?

**அம்மா:** என்னங்க படிக்கிற பிள்ளையை போய் வேலைக்கு அனுப்பலாமான்னு கேக்குறீங்க! நம்ம தான் கஷ்டப்படுறோம், அவனை வேலைக்கு அனுப்பிட்டு அப்புறம் அவனும் கஷ்டப்படனுமா?

**அப்பா:** கொஞ்சநாளு படிக்காம வேலைக்கு போகட்டும். நம்ம கஷ்டம் தீர்ந்ததுக்கு அப்புறம் படிக்கவைக்கலாம். நான் அவனிடம் பேசுகிறேன்.

**அப்பா:** கோபி கோபி இங்கே வாப்பா .
..

**கோபி:** என்னங்க அப்பா...

**அப்பா:** கொஞ்ச நாள் நீ வேலைக்கு போறியா? வீட்டில் கஷ்டமாக உள்ளது. எங்களுக்கு சம்பளம் பத்த மாட்டேங்குது. நீ கொஞ்சம் வேலைக்கு போனா குடும்பம் நடத்தலாம் இல்லையா....

**கோபி:** (அதிர்ச்சியுடன்) அப்பா நான் படிக்கணும்பா !

**அப்பா:** பரவால்லப்பா அப்புறம் படிக்கலாம், கொஞ்ச நாள் வேலைக்கு போ கோபி என்ன பண்றது, அம்மாவும் அப்பாவும் கஷ்டப்படுறோம் இல்லையா !

(கோபியும் யோசித்தான். வீட்ல கஷ்டம்னு சொல்லுறாங்க, நம்ம கொஞ்சம் வேலைக்குபோய் தான் பார்க்கலாம்)

**கோபி:** சரிபா நான் வேலைக்கு போறேன்.

(கோபியின் நண்பன் நிஷாந்த் வழியில் கோபியை பார்த்தான்.)

**கோபியின் நண்பன் :** யாரு கோபியா ! என்னடா ஸ்கூலுக்கு போகல, எப்பவும் படிச்சிட்டே இருப்பியே?

**கோபி :** இல்லடா நான் வேலைக்கு போறேன். அப்பா அம்மாவுக்கு பணம் இல்லையாம், அதனால வேலைக்கு போக சொல்லிட்டாங்க! எனக்கு ரொம்ப ரொம்ப கஷ்டமா இருக்குடா !

**கோபியின் நண்பன்:** சரி கவலைப்படாத எல்லாம் சரியாயிடும். உன் கஷ்டத்துக்கு நான் ஒரு மருந்து தர்றேன். நல்லா நிம்மதியா இருப்ப. இந்த மருந்தை வாயில வச்சுக்கோ எல்லா கவலையும் போயிடும். இது விற்கும் கடையை நான் காட்டுறேன். அங்க போய் வாங்கிக்கோ என்றான்.

*(சில நாளைக்குள்ள போதை பொருளுக்கு அடிமையானான் கோபி.*
*ஒருநாள் அய்யோ தலைவலிக்குது! காசுவேற இல்ல! அண்ணா கிட்ட போய் கேட்டு பார்க்கலாம் என்று போதை பொருள்விற்கும் கடைக்கு சென்றான்)*

**கோபி :** அண்ணா காசு இல்ல நாளைக்கு தர, மிட்டாய் தாங்க...

**மருந்து கடைக்காரன்:** காசு இல்லன்னா தர முடியாது போ! போ!

**கோபி:** அண்ணா ப்ளீஸ் அண்ணா. சாரி.. அண்ணா கொடுங்க நான் நாளைக்கு உடனே தந்து விடுகிறேன்

**மருந்து கடைக்காரன்:** நீ வேலைக்கு போய் காசு தர வேண்டாம், நான் உனக்கு வேலை தரேன். நீ அந்த வேலையை செய்வாயா?

**கோபி:** என்ன வேலை சொல்லுங்க அண்ணா நான் செய்றேன்.

**மருந்து கடைக்காரன்:** அங்க இருக்கிற ஸ்கூல்ல இந்த மாத்திரை எடுத்துட்டு போய் வித்துட்டு வா.

**கோபி:** சரி அண்ணா என்ற கோபி, பள்ளி அருகே சென்று அங்கே நின்று கொண்டு இருந்த சுல்தான், நந்தகோபால் இருவரையும் அழைத்து போதை மாத்திரையை காட்டி இதை வாயில் வைத்து கொள் நன்றாக இருக்கும் என்றான். .

**சுல்தான்:** எனக்கு வேண்டாம் பயமாக இருக்கிறது.

**கோபி:** பயம் ஒன்றும் இல்லை, நானும் தான் வாயில் போட்டு க் கொண்டுள்ளேன் பாரு.

(அந்த மாத்திரையை கையில் வாங்கினான். அப்போது பள்ளி ஆசிரியர் அவர்களை பார்த்து விட்டார்)

**ஆசிரியர்:** நந்தகோபால், சுல்தான் இங்கே வாங்க, கையை காட்டு என்ன அது? யார் உங்களுக்கு கொடுத்தது.

**சுல்தான்:** பயந்து கொண்டே நமது பள்ளியில் போன வருடம் படித்த கோபி அண்ணா தான் கொடுத்தார் டீச்சர்.

**ஆசிரியர் :** அவன் நன்றாக படிக்க கூடிய பையன் ஆச்சே! திடீர்னு பள்ளிக்கு வரவில்லை. அவனா கொடுத்தான். அவன் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் வாருங்கள்.

(அவர்களை அழைத்து கொண்டு காவல் நிலையம் சென்றார்).

**ஆசிரியர் :** சார் பையன் நல்ல பையன், நன்றாக படிக்க கூடியவன். குடும்ப கஷ்டம் என்று அவனை வேலைக்கு அனுப்பி இப்படி போதை பொருள்விற்கும் அளவிற்கு போதைக்கு அடிமை ஆகிவிட்டான். எப்படியாவது அவன் படிக்க நீங்கள் உதவி செய்ய வேண்டும்.

**காவல் அதிகாரி :** கோபியை கூப்பிட்டு நீ நன்றாக படிப்பாய் என்று உனது ஆசிரியர் கூறியதால் உன்னை விடுகிறேன். இனியாவது இந்த போதையில் இருந்து வெளி வந்து படி. உன்தாய், தந்தையரிடம் நான் பேசுகிறேன். ஸ்கூல்ல நடக்கும் என் எம் எம் எஸ் (NMMS) தேர்வு எழுதி பாஸ் ஆயிடு, மாசம் உனக்கு ஆயிரம் ரூபாய் உதவி தொகையாக கிடைக்கும் அது 12 ஆம் வகுப்பு வரைக்கும் கிடைக்கும்.

**கோபி:** சரி ஐயா நான் இனி எந்த போதை பொருளையும் பயன்படுத்த மாட்டேன் . நான் தேர்வு எழுதுகிறேன். என்னை மன்னித்து விடுங்கள்.

(கோபி தேர்வு எழுதி பாஸ் பண்ணிட்டான். அவனுக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது, அவன் படிப்பை மீண்டும் தொடர்ந்தான்.)

**இது போல மாணவர்கள் பள்ளி படிப்பை விட்டு வேலைக்கு சென்று போதைக்கு அடிமையாகி இப்பொழுது கோபி நிலைமையில் இருக்கிறார்கள். அரசு உதவித் தொகை வழங்குகிறது அதை பயன்படுத்தி மாணவர்கள் பயன்பெறவேண்டும் அதனால் அனைவரும் நன்றாக படியுங்கள் .**



**K. நிஷாந்த்**
9ஆம் வகுப்பு. எண்ணூர்

# தண்ணீர்

**முன் கதை சுருக்கம்**

**(தண்ணீர் எடுக்க சென்ற இந்திரா ரயில் வண்டியில் மாட்டிக் கொண்டாள். ரயில் வண்டியிலிருந்து வேகமாக இறங்கும் போது ஒரு வட இந்திய பெண் அவள் கையைப் பிடித்து என்ன தற்கொலை செய்து கொள்ள விரும்புகிறாயா இப்படிவா என்று அவளை உள்ளே தள்ளினாள்.)**

**தொடர் கதை**

'இல்லை நான் தற்கொலை செய்து கொள்ள வில்லை என் அம்மா எனக்காக காத்திருப்பார்கள் என்னை விடுங்கள்' என்று அவள் கையை உதறினாள்.

ஆனால் அவளை இறுக்கமாக பற்றிக் கொண்ட வட இந்திய பெண் இந்த புகைவண்டி அதிவிரைவு புகைவண்டி இது எங்கும் நிற்காது இன்னும் ஒரு இரண்டு மணிநேரத்தில் பீகார் இரயில் நிலையத்தில் நிற்கும். அங்கு தான் இறங்க முடியும் என்று அவள் ஹிந்தியில் கத்தினாள். அவள் பேசும் மொழி தெரியாமல் இந்திரா முழித்து கொண்டு நின்றாள்.

இந்திரா அழுது கொண்டே ஒரு ஓரமாக அமர்ந்திருந்தாள். சிறிது நேரத்திற்கு பிறகு ஒரு இரயில் நிலையத்தில் இரயில் நின்றது. அந்த வண்டியை விட்டு இறங்கிய இந்திரா சுற்றுமுற்றும் பார்த்து முழித்துக் கொண்டிருந்தாள். நடு இரவு, பயத்துடன் அப்படியே அந்த ரயில்வே நடைமேடையில் உட்காா்ந்து அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கு வந்த நான்கு இளைஞர்கள் அவளைப் பார்த்து என்ன இங்கு வந்திருக்கிறாய் உன் பெயர் என்ன? உன் வீடு தெரியவில்லையா என்று கேட்டனர். அண்ணா நான் இங்கு தெரியாம வந்து விட்டேன். நான் காவல் நிலையத்திற்கு செல்ல வேண்டும் எனக்கு வழி காண்பிப்பீா்களா என்று கூறினாள்.

எங்களோடு வா என்று அவளை இழுத்துக் கொண்டு சென்றனர். அவள் என்னை விடுங்கள் விடுங்கள் என்று கத்தினாள். அப்பொழுது அவர்கள் விடவில்லை. அவள் தன் பலம் முழுவதையும் உடலுக்கு கொண்டு வந்து கையை உதறிவிட்டு அங்கிருந்து ஓடினாள்.

அவர்களும் பின்னால் துரத்திக் கொண்டு வந்தனர்கள். ஓடி ஓடி மூச்சு வாங்கியது அவளுக்கு, சுற்றும் முற்றும் யாரும் இல்லை, தெரு விருச்சோடி போய் இருந்தது. அதனால் மிகவும் பயந்து ஓடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவள் மனசுக்குள் ஒரு எண்ணம். நாம் இப்படி ஓடிக் கொண்டிருந்தால் கண்டிப்பாக அவர்களிடம் மாட்டிக் கொள்வோம். நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தாள். வேகமாக ஓடிக் கொண்டிருந்த இந்திரா சடார் என நின்று திரும்பிப் பார்த்தாள் அப்பொழுது இளைஞர்கள் அனைவரும் என்ன திடீரென்று நின்று விட்டாளே என்று ஒரு கணம் நின்றனர். அப்பொழுது குனிந்த இந்திரா, அங்கு குவிந்து கிடந்த கருங்கற்களை கையில் எடுத்து ஒவ்வொன்றாக வேகமாக அவர்களை நோக்கி வீச ஆரம்பித்தாள். அவள் அடிக்க ஆரம்பித்தவுடன் அவர்கள் எங்களையா அடிக்கிறாய் உன்னை கொலை செய்து விடுகிறேன் என்று கத்தினார்கள்.

அவள் விடாமல் கருங்கற்கலை எடுத்து அடித்தாள். அவர்கள் தலையில், கையில், காலில் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் கொட்டியது. அதனால் அவர்கள் கொஞ்சம் பின் வாங்கினார்கள். அந்த சமயத்தை பயன்படுத்திக் கொண்டு இந்திரா வேகமாக அங்கிருந்து தப்பி ஓடி ரயில்வே காவல் நிலையத்தினுள் சென்று சார் சார் என்னை காப்பாற்றுங்கள் என்று மூச்சிரைக்க கீழே விழுந்து விட்டாள். அங்கிருந்த காவல் அதிகாரிகள் தூக்கி அவளுக்கு தண்ணீர் கொடுத்து உனக்கு என்ன ஆயிற்று என்று பதற்றமுடன் கேட்டனர்

நடந்த விஷயங்களை ஒவ்வொன்றாக காவல் அதிகாரிகளிடம் இந்திரா கூறினாள். அப்பொழுது காவல் அதிகாரிகள் இப்படி தனியாக வரலாமா? நான் உங்கள் கிராமத்திற்கு தொடர்பு கொண்டு உங்கள் பெற்றோர்களுக்கு செய்தி அனுப்புகிறேன் என்று கூறினார்கள். அவளுக்கு சாப்பாடு வாங்கி கொடுத்தனர். நடு இரவு ஆனதால் அவளை பக்கத்தில் உள்ள குழந்தைகள் பாதுகாப்பு இல்லத்திற்கு அழைத்து சென்று அங்குள்ள ஹாஸ்டலில் தங்க வைத்தனர்.

மறு நாள் அவர்கள் கிராமத்திற்கும் பெற்றோர் களுக்கும் தகவல் கொடுத்த பின்பு, அவர்கள் தகுந்த ஆதாரங்களை கொடுத்து அவளை ஹாஸ்டலில் இருந்து மீட்டு சென்றார்கள். காவலர்களுக்கு நன்றி தெரிவித்த இந்திரா தன் கிராமத்திற்கு மகிழ்ச்சியாக சென்றாள்.

நடந்த விசயங்களை கேள்விபட்டு அவள் பள்ளி ஆசிரியர்கள் இந்திராவை பாராட்டினார்கள். புத்திசாலிதனமாக, தைரியமாக முடிவெடுத்து தப்பித்து விட்டாய் என்று நண்பர்களும் பாராட்டினார்கள்.


தண்ணீர் பிரச்சனை குறித்தும் அதனால் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர் என்பது மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்கப்பட்டது. அந்த கிராமத்திற்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்க ஆவன செய்யப்பட்டது. இந்திராவும் அவள் கிராமத்தினரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்

....முற்றும்



**K. நிஷாந்த்**
9ஆம் வகுப்பு. எண்ணூர்

போதை விழிப்புணர்வு ஓவியம்



**P.REKHA**
(12th Std) K.P.T
Gopal Nagar

## கவிதை

**பிறந்த குழந்தை ஆறு மாதத்தில் தள்ளாடி தவழ்ந்து நடக்கிறது !**

**பிறந்து வளர்ந்த குழந்தை மது என்னும் போதையில் தள்ளாடி பறந்து தலை குனிந்து நடக்கின்றது !**

**மனிதன் மனிதனாக இருக்கிறான் போதைக்கு அடிமையானால் அவன் மிருகமாகிறான் !**

**கடலை விட மிகப் பெரியது போதை ! நீச்சல் தெரிந்தால் போதையில் இருந்து வெளிவந்து விடலாம் !!**



**V. ராஜேஷ்**
9ஆம் வகுப்பு
கொருக்குப்பேட்டை

# அரசு ஆளுகையில் பங்கேற்போம் ! நமது உரிமையை நிலைநாட்டுவோம் !!

அனைவருக்கும் வணக்கம் ! என் பெயர் யுவஸ்ரீ. சிட்டெறும்பு பேசுது இதழின் ஆசிரியர் மற்றும் குழந்தைகள் நகரசபையின் உறுப்பினராகவும் உள்ளேன்.



குழந்தைகளின் நகரசபை கூட்டம் என்பது வருடத்திற்கு நான்கு முறை நடைபெறுகிறது. அதில் குழந்தைகளின் கோரிக்கைகளை சேகரித்து பகுதி அளவில் கூட்டம் நடத்தி மாமன்ற உறுப்பினர், ஊர் தலைவர் போன்ற தலைவர்களிடம் கொடுப்போம்.

இந்த முறை ஆகஸ்ட் 15 அன்று குழந்தைகள் நகரசபை கூட்டம் 10 வார்டுகளில் நடைபெற்றது. அதில் நாங்கள் கொடுத்த கோரிக்கைகள் சிலவற்றை மாமன்ற உறுப்பினர்கள் உடனுக்குடன் நிவர்த்தி செய்து உள்ளனர்.ஆகஸ்ட் 15 கூட்டத்தில் நடைபெற்ற சில விசயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

## வார்டு 3

M5 காவல் நிலைய ஆய்வாளர் திரு.ராஜன் அவர்கள் போக்குவரத்து காவலர் மற்றும் காவலர் வாகனத்தை குழந்தைகளின் பாதுகாப்பிற்காக பகுதியை சுற்றி கண்காணிக்க நியமிக்கிறேன் என்று கூறினார்.

## வார்டு 6

நகரசபை உறுப்பினர்களாகிய குழந்தைகள் அங்குள்ள வண்ணார் குளத்தில் அதிகமான அசுத்தம் உள்ளது. இதனால் கொசுக்கள் பெருகி அங்கு தொற்று நோயை பரவுகின்றது. எனவே குளத்தை தூர் வாரி தூய்மைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கையை ஆறாவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.சாமுவேல் திரவியம் அவர்கள் நிறைவேற்றியுள்ளார். குளத்தை சுத்தமாக தூர் வாரி அகலப்படுத்தி கரைகளின் மேல் அழகான மரம் செடிகளை நட்டு மிகவும் தூய்மைப்படுத்தி உள்ளார்.

## வார்டு 38

மாமன்ற உறுப்பினர் திரு.U.கணேசன் அவர்கள் அந்த பகுதியில் போதைப் பழக்கத்தில் உள்ளவர்கள் அதிக பிரச்சனையை செய்கின்றனர். அதனால் காவலர் வாகனம் தொடர்ந்து கண்காணிக்க ஏற்பாடு செய்தார்.

மேலும் குழந்தைகளுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் உடனே என்னுடைய நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். அது எந்த நேரம் ஆனாலும் நான் உங்களுக்கு உதவி செய்வேன் என்று உறுதி அளித்தார்.

## வார்டு 52

சிட்டெறும்பு பேசுது புத்தகத்தில் சிவகார்த்திகேயன் கேரம்போர்டு திறமையை பற்றி பேட்டி அளித்ததினால் அவனுடைய புகைப்படத்துடன் அந்த பேட்டி வெளியானது. அதனை பாராட்டி பகுதி தலைவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர் இன்னும் சிறப்பாக வளரவேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். மேலும் குழந்தைகள் கொடுத்த கோரிக்கையை மாமன்ற உறுப்பினர்களிடம் கொடுப்போம் என்றும் கூறினார்கள்.

## வார்டு-41

எம்.ஜி.ஆர் நகரில் உள்ள பூங்காவில் குழந்தைகள் விளையாட விளையாட்டு பொருட்கள் அமைக்கப்பட்டது.

இப்படி அதிகமாக எங்களது கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றி எங்கள் உரிமையை பெறவும் இந்த குழந்தைகள் நகரசபை கூட்டம் வழிவகை செய்கின்றது. அது எங்களை இன்னும் ஊக்குவிக்கின்றது. இந்த நகரசபையை தொடர்ந்து நடத்துவோம் எங்களது உரிமையை நிலை நாட்டுவோம்.



**H. யுவஸ்ரீ**
11 ஆம் வகுப்பு.
கொருக்குப்பேட்டை

## ORIGIN OF LEADER

My first election experience in Arunodhaya children Sangam is a significant milestone in my life. I first won the Children Nagara Sabai leader and now I am the President of the Confederation of Arunodhaya Children Sangam. I am proud and happy for this.

**The road to victory**

My entry into Arunodhaya children sangam happened in a simple way. My friends asked me to involve in this Children sangam. My first meeting was about child rights, an interesting topic. I liked it and came to join children sangam and attended all meetings.

I speak loudly in front of all in this children sangam on the importance of all children going to school. Everyone clapped for me and it was the happiest moment and I got goosebumps. In 2024, I stood in CACS Election as a leader and I am happy to get elected. It is not vote it is trust of them on me.

**Promise of the Leder**

I Promise from my whole heart, that without any discretion I will stand for truth and for children. I will do my best in my work.

**"Leadership is a throne with thorns"**



**MK. நகுலன்**
11ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை



# வாங்க போதையில்லா உலகத்தை உருவாக்குவோம்

“போதை அது சாவின் பாதை” என்ற பழமொழிக்கு ஏற்ப இன்று கள்ளம் கபடமற்ற குழந்தைகளின் இன்னுயிரை ஈவு இரக்கமின்றி எடுக்கும் போதை என்ற அரக்கன் பிடியில் குழந்தைகள்.


மழலை குரலில்பேசி, மகிழ்ச்சியுடன் விளையாடி மகிழும் குழந்தைகள் இன்று போதையின் பிடியில் சிக்கி சீரழியும் நிலை!!

குழந்தைகளுக்கு விருப்பமான “சாக்லேட்” இன்று கூலிப் ஆகமாறியது ஏனோ? உற்சாகமாக ஆடி, பாடி விளையாடும் குழந்தைகள் இன்று மது மயக்கத்தில் தன் சுயநினைவை இழந்து இளம் குற்றவாளிகளாக மாறும் நிலை ஏனோ?

கூட்டம் கூட்டமாக விளையாடிய குழந்தைகள் இன்று தனி அறைகளில் தாய் தந்தையரிடம் பேசக்கூட திறன் அற்று தனிதனியாக வாழும் நிலை ஏனோ ?

இவையெல்லாம் குழந்தைகளின் தலைவிதியா? அல்லது மனிதர்களின் சதியா?

இப்படி ஏராளமான கேள்விகள் என்னுள் எழுந்தது. குழந்தைகளின் மேலான நலன் மற்றும் பாதுகாப்பை உறுப்பு நாடுகள் அளிக்க வேண்டும் என்பது UNCRC குழந்தைகள் உரிமைகள் மீதான சாசனத்தில் உள்ளது. இதில் இந்தியா கையொப்பம் இட்டு ஏற்று கொண்டது மட்டுமின்றி உலக நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்கான சட்டங்களும் இயற்றி உள்ளது. இருந்தும் குழந்தைகளுக்கு ஏன் இந்த கொடுமை!!



**S.Dharshan, 9th Std, Kasi Koil Kuppam**

**சட்டம் என்ன சொல்கின்றது பார்ப்போம்!**

போதை பொருள் தடுப்புக்காக 1985 ஆண்டு என்டிபிஎஸ் Narcotics Drugs and Psychotropic Substances Act 1985(NDPS) போதை பொருள் தடுப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. மத்திய உள்துறைக்கு கீழ் அடங்கும் இந்த சட்டம் மூலமாக போதை பொருள் தயாரித்தல், கடத்தல், விற்றல், பதுக்குதல், பயன்படுத்துதல் ஆகிய அனைத்தும் குற்றம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் போதை பொருள் விவகாரத்தில் இந்த சட்டத்தின் கீழ் தகுந்த ஆதாரத்தோடு கைது செய்யப்பட்டால் அன்றைய தினத்திலிருந்தே அவர் தண்டனை தொடங்கிவிடும். ஜாமீனில் வெளிவர முடியாத 10 வருடங்கள் கடுங்காவல் தண்டனை அளிக்கப்படும். ஒருவர் ஒருமுறை NDPS சட்டத்தின் கீழ் தண்டனை அனுபவித்து மீண்டும் அதே குற்றத்தை செய்தால் மரண தண்டனை விதிக்கவும் சட்டத்தில் இடமுண்டு.

சிகரெட் மற்றும் புகையிலை பொருட்களை தடைசெய்யும் கோட்பா சட்டம் 2003 பிரிவு 4 -ன் கீழ் பொது இடங்களில் புகை பிடிப்பதும், கல்வி நிறுவனங்களின் அருகே விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. பான்பராக் மற்றும் புகையிலை எச்சில் துப்புபவருக்கு ருபாய் 2000 அபராதம் மற்றும் 18 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு சிகரெட் மற்றும் போதைப் பொருள் விற்பது சட்டப்படி குற்றம் என்று கூறப்பட்டுள்ளது.




J. Dharsan
Karumariyamman Nagar
7th Std, K.P.T

### சட்டம் இருந்தும் இன்றைய குழந்தைகள் நிலை

எனினும் போதை பொருள் நிறுவனங்கள் குழந்தைகளை குறிவைத்தே விற்பனையை அதிகரித்து வருகின்றது என்ற தகவல் அதிர்ச்சி அளிக்கின்றது. பள்ளிக்கருகாமையில் போதை வஸ்துக்கள் விற்ககூடாது என்ற சட்டம் 100 சதவீதம் மீறப்பட்டுள்ளது. கல்வி நிலையங்கள், இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் போன்ற பொது இடங்களில் போதை விற்பனை அதிகம் உள்ளது. இதனால் 18 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு போதை பொருட்கள் எளிதாக கிடைக்கும் வாய்ப்பு அதிகரிக்கிறது. குழந்தைகளே போதை பொருட்கள் விற்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். 18 வயதிற்கு கீழ் சிகரெட் விற்ககூடாது என்ற அறிவிப்பு பலகை 98% கடைகளில் இருப்பது இல்லை, 41% மாணவர்கள் புகைபழக்கத்திற்கு அடிமையாக உள்ளனர் என்ற தகவல் கவலையளிப்பதாக உள்ளது.



**S. விஷால்**
12 ஆம் வகுப்பு. எண்ணூர்

### தீர்வு


சிகரெட் மற்றும் புகையிலை பொருட்கள் விற்பவர்கள் மீது மத்திய அரசு, மாநில அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் புகையிலை குறித்த சட்ட விதிமுறைகளை மீறுபவர்களுக்கு சட்டப்படி தண்டனை அளிக்க வேண்டும். முறைப்படி பொது இடங்களில் குழந்தைகளுக்கு போதை பொருட்கள் விற்கக்கூடாது என்ற விளம்பரப்பலகை வைக்க வேண்டும். பெட்டி கடைகளில் இங்கு சிறுவர்களுக்கு எந்தவித போதை பொருட்களும் விற்கப்படுவதில்லை என்ற விளம்பரப்பலகை கட்டாயமாக்கப்பட வேண்டும். மேலும் அதிரடி சோதனைகள் நடத்தி குற்றவாளிகளை கண்டறிந்து தண்டனை அளிக்க வேண்டும்.

குாந்தைகளாகிய நாம் சிறுவயதில் போதைக்கு அடிமையானால் அது நம் வாழ்வை மென்று தின்றுவிடும். எனவே நாம் மிகவும் கவனமுடன் போதைக்கு அடிமையாகாமல் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ....“நாம் போதையில்லா உலகத்தை உருவாக்குவோம்”

K. Dharshika, 6th Std, A.S. Nagar




J. Dharsan, Karumariyamman Nagar
7th Std, K.P.T



# விடியலை நோக்கி (நேர்காணல்)

(என் வீட்டிற்கு பக்கத்தில் ஒருவர் தினமும் குடித்துவிட்டு இருப்பார். அவர்கள் வீட்டில் அவரை மதிக்க மாட்டார்கள். எப்போதும் வீட்டிற்க்கு வெளியே படுத்து இருப்பார். அவரிடம் பேசி அவர் எப்படி இந்த போதைக்கு அடிமையானர் என்பதை கேட்டு அவருக்கு உதவி செய்யலாம் என்ற நோக்கத்தோடு அந்த அண்ணனிடம் பேசினேன்)

**நிஷாந்த்:** வணக்கம் அண்ணா!! உங்களிடம் நான் சில விஷயங்களை கேட்டு தெரிந்து கொள்ளலாமா ?

**குடி நோயினால் பாதிக்கப்பட்டவர்:** வணக்கம் நிஷாந்த், என்ன கேள்வி எதுவா இருந்தாலும் கேளுங்கள் நானும் சொல்கிறேன்.

**நிஷாந்த்:** நீங்கள் எப்பொழுது இந்த போதை என்னும் கொடுமையான அரக்கனுக்கு அடிமையானீர்கள் ?

**குடி நோயினால் பாதிக்கப்பட்டவர்:** நான் எனது பத்து வயதில் ஐந்தாம் வகுப்பு படித்து வந்தேன். அப்போது பள்ளி பேருந்து நிறுத்தத்தில் சில பேர் நின்று 20 ரூபாய்க்கு என்று ஐந்து சிறிய தலகாணி தருவார்கள், அதை ஒருநாள் நான் வாங்கி வாயில் போட்டேன். மயக்கம் வந்தது, வாந்தி வந்தது. ஆனால் நன்றாக இருந்தது. அப்போது தான் நான் அந்த போதைக்கு அடிமை ஆனேன்.

**நிஷாந்த்:** நீங்கள் போதைக்கு அடிமையாக இருந்தது எல்லாருக்கும் தெரியுமா ?

**குடி நோயினால் பாதிக்கப்பட்டவர்:** நான் போதைக்கு அடிமையானது எனது நண்பர்களுக்கு தெரியும். அதன் பின் நான் எட்டாம் வகுப்பு படிக்கும் போது நான் ஒரு பெண்ணிடம் பழகினேன் அந்த பெண்ணிற்கும் தெரியும். ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போது எனது அம்மா அப்பாவுக்கு தெரியும்....

**நிஷாந்த்:** அதன் பிறகு என்னென்ன போதைக்கு நீங்கள் அடிமை ஆனீர்கள் ?

**குடி நோயினால் பாதிக்கப்பட்டவர்:** முதலில் கூலிப், அடுத்தது ஒன்பதாவது படிக்கும்போது ஆன்ஸ் உபயோகித்தேன். ஒன்பதாவது அரையாண்டு தேர்வு தொடக்கத்தில் பீடி, சிகரெட், அது பின்னால் டம்மு என்ற பொருளுக்கு அடிமையானேன்.



K. நிஷாந்த்
9ஆம் வகுப்பு. எண்ணூர்

**நிஷாந்த்:** டம்மு என்றால் என்ன அண்ணா?

**குடிநோயினால் பாதிக்கப்பட்டவர்:** டம்மு என்றால் கஞ்சா இலையை கசக்கி பீடியில் வைத்து சுற்றி சிகரெட் போல பிடிப்பது தான் டம்மு. அது ரொம்ப போதையாக இருக்கும், அது பிடித்தால் நமக்கு காற்றில் பறப்பது போல உணர்வு இருக்கும், வீரமும் வரும், நாம் என்ன செய்கிறோம் என்று நமக்கே தெரியாது.

**நிஷாந்த்:** கிட்ட தட்ட பைத்தியம் மாதிரி போல. அப்படியா சரி வேற என்ன போதை பொருளுக்கு அடிமையானீர்கள் ?

**குடி நோயினால் பாதிக்கப்பட்டவர்:** அடுத்து நான் பத்தாம் வகுப்பு படிக்கும் போது மதுபானத்திற்கு அடிமையானேன்.

**நிஷாந்த்:** சரி இதிலிருந்து வெளி வரவேண்டும் என்று நீங்கள் நினைத்திருக்கிறீர்களா ?

**குடி நோயினால் பாதிக்கப்பட்டவர்:** நான் பல நாட்கள் நினைத்து இருக்கிறேன். இதிலிருந்து வெளிவர வேண்டும் என்று நினைத்தேன், ஆனால் என்னால் முடியவில்லை.

**நிஷாந்த்:** நீங்கள் போதையில் இருந்து வெளிவர வேண்டும் என்று நினைத்தால் நான் உங்களுக்கு உதவி செய்கிறேன். எங்கள் அருணோதயா பணியாளரிடம் கூறினால் அவர்கள் போதை மறுவாழ்வு மையத்திற்கு அழைத்துச் சென்று உங்களை இந்த பழக்கத்தில் இருந்து வெளிக் கொண்டு வருவார்கள். உங்களுக்கு சம்மதமா?

**குடி நோயினால் பாதிக்கப்பட்டவர்:** இது போன்று என்னிடம் யாரும் பேசியது இல்லை. என்னை குடிகாரன் என்று வெறுத்து ஒதுக்கினார்கள். அந்த கோபத்தில் நானும் அதிகமாக குடித்தேன். இப்போது எனக்கு சம்மதம் தான். நானும் மற்றவர்களை போல மதிப்போடு வாழவேண்டும். என் குழந்தைகள் என்னை மதிக்க வேண்டும்.

**நிஷாந்த்:** என்னிடம் நீங்கள் வெளிப்படையாக பேசியதற்கு நன்றி!! உங்கள் வாழ்க்கை போதை என்னும் இருளில் இருந்தது போதும். விடியலை நோக்கி வாருங்கள் வணக்கம்!! நான் சென்று வருகிறேன் அண்ணா.

# உண்மை சம்பவம்

என் பெயர் சாந்தி (பெயர் மாற்றப்பட்டது) வயது 13, ஏழாம் வகுப்பு படிக்கின்றேன் போதை அப்படி நினைத்தாலே பயமாக இருக்கிறது. ஏன் கேக்குறீங்களா? ஒருநாள் சாயங்காலம் நான், என் அம்மா, தம்பி, பாட்டி அனைவரும் பேசிக்கொண்டே தொலைக்காட்சி பார்த்து கொண்டு இருந்தோம். அப்போது சிலர் எங்க வீட்டின் உள்ளே புகுந்தனர். வீட்டில் உள்ள பொருட்களை அடித்து உடைத்தனர். என் அம்மா பயந்து போய் என்னையும் என் தம்பியையும் இறுக்க பற்றி கொண்டு பீரோவின் பின்னால் ஒளிந்து கொண்டார். என் பாட்டி அவர்களிடம் யார் நீங்க ? ஏன் இப்படி செய்கிறீர்கள் ? என்று கேட்டு கொண்டே வெளியே போய் உதவிக்கு ஆளை கூப்பிடலாம் என்று ஓடினார். அதற்குள் எங்க பாட்டியை சுற்றி வளைத்து அடித்தனர். அதை கண்டு மிரண்டு போன நானும் என் அம்மாவும் அவர்களை தடுக்க ஓடினோம். அதற்குள் ஒரு கட்டையால் என் பாட்டியின் மண்டையில் அடித்து மண்டையை உடைத்தனர். பாட்டி அலறியபடி கிழே சாய்ந்தார். இரத்த வெள்ளத்தில் கிழே விழுந்த பாட்டியை பார்த்ததும் அந்த கும்பல் ஓடி விட்டனர். யார் அவர்கள் எதற்காக வந்தார்கள் என்று கூட எங்களுக்கு தெரியவில்லை. பாட்டியை ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம்.

அங்கு பாட்டிக்கு மண்டையில் பத்து தையல் போட்டனர். பாட்டி பாவம், வலி தாங்காமல் முனங்கி கொண்டே இருந்தார்கள். அந்த சம்பவத்திற்கு அப்புறம் தான் தெரிஞ்சது, அந்த கும்பல் கஞ்சா அடித்து விட்டு சமூகவிரோத செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று, போலீசில் தகவல் கொடுத்தோம். அவர்களும் நாங்கள் கண்டு பிடிக்கிறோம் என்று ஈஸியாக சொல்லி விட்டனர். என் கண் முன்னாடியே அந்த நேரத்துல நடந்தது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? ஒரே பயம் என்னையும் அடிச்சிடுவாங்கன்னு நான் நடுங்கிக்கிட்டே ஒரு ஓரமாக நின்னுட்டேன்.

வந்த பசங்களோட போதை அதிகமாக இருந்ததால தான் அப்படி எல்லாம் நடந்து கிட்டாங்க. இதனால் என் படிப்பு பாதித்தது, எங்க அப்பாவும் அம்மாவும் இந்த ஊரிலேயே, இந்த வீட்டிலேயே இருக்க வேண்டாம் என்று சொல்லிவேற இடத்துக்கு கூட்டிட்டு போய்விட்டார்கள். ஆனால் என் பாட்டி தான் பயப்படாதே நீ திரும்பவும் படிக்கணும் என்று சொல்லி அதே பள்ளியில் சேர்க்க முயற்சி பண்ணினார்கள். ஆனால் எனக்கு அந்த சம்பவம் நினைவுக்கு வந்தபடி உள்ளது. இரவானால் பயப்படும் அளவிற்கு கனவு வருகின்றது.

**போதை மனிதனை மிருகமாக்கும் என்று அன்று தான் நான் தெரிந்து கொண்டேன்.**

# போதை அழிவின் பாதை

மக்கள் சமுதாயத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் எதிராக உலக அளவில் எழுந்திருக்கும் பிரச்சனை போதைப் பழக்கம் ஆகும்

வயது வித்தியாசமின்றி சமுதாயத்தில் போதைப் பழக்கம் வேரூன்றியுள்ளமை கவலைக்குரியதாகும். போதை பொருளை தடுக்கும் விதமாக பல சட்டங்கள் முன் வைக்கப்பட்டாலும் அதனை முற்றிலுமாக ஒழித்து விட முடியாது. போதைப் பழக்கம் ஆண்கள் மட்டுமின்றி பெண்களிடத்திலும் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## போதைப் பழக்கம் ஏற்பட காரணங்கள்

பள்ளிப் பருவத்தில் நட்பு வட்டாரத்தினர் கொடுக்கும் அழுத்தம், வசிப்பிடச் சூழல், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் திரை பிரபலங்களை பார்த்து பழகுதல், சுய விருப்பம், தற்காலிக மகிழ்ச்சி மற்றும் சிலரின் தவறான நட்பு போன்ற பல காரணங்களால் போதைப் பழக்கம் ஏற்படுகிறது.

## உலக போதை பொருள் ஒழிப்பு தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 26 ஆம் தேதி சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினமாக கடை பிடிக்கப்பட்டு வருகிறது. போதை பொருள் பயன்பாடு மற்றும் சட்ட விரோத போதை பொருள் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினமாக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

மனித சமூகத்திற்கு போதை பொருள் பயன்பாடு பாதிப்புகளை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

**D. தான்யஶ்ரீ**
9ஆம் வகுப்பு. எண்ணூர்



# குழந்தை பங்கேற்பின் வெளிப்பாடு

என் பெயர் L. யுவராணி, நான் 38 வது வார்டில், வினோபா நகரில் வசிக்கிறேன்.

எனது வீட்டின் அருகே சிலர் மது அருந்திவிட்டு தினமும் ரோட்டில் கும்பலாக நின்று கொண்டு வருகிற போகிறவர்களை கேலி, கிண்டல் செய்து வந்தனர். அந்த கும்பலை தாண்டி பள்ளிக்கு போகும் பொழுது மிகவும் பயமாக இருக்கும். பயந்து கொண்டே செல்வேன். சில நேரம் அந்த வழியில் போகாமல் ஒரு கிலோ மீட்டர் சுற்றி கொண்டு பள்ளிக்கு தாமதமாக போய் திட்டும் வாங்கி கொண்டிருக்கின்றேன்,என்ன செய்வது? இந்த பிரச்சனையை எவ்வாறு தீர்ப்பது என்று நான் நினைத்து கொண்டே இருப்பேன்.

அப்போது வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் எங்கள் வார்டில் அருணோதயாவின் முயற்சியினால் உருவாக்கப்பட்டது. இந்த குழுவில் எங்கள் வார்டில் குழந்தைகள் சங்க பிரதிநிதியாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

நானும் குழந்தைகள் பாதுகாப்பு குழுவில் ஒரு உறுப்பினராக சேர்ந்து கொண்டு ஜூன் 2024 அன்று நடந்த குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டத்தில் என் பிரச்சனையை உரக்கக் கூறினேன். உடனே அங்கு வந்திருந்த காவல் அதிகாரி நான் அந்த பிரச்சனைக்கு தீர்வு காணுகிறேன் என்று உறுதி அளித்தார். அதன் படி தினமும் காவல் ஊர்தி மூலம் கண்காணிப்பு செய்து அந்த கும்பலை அங்கிருந்து விரட்டினார். தொடர்ந்து கண்காணிப்பு செய்ததில் அந்த நபர்கள் அங்கு நிற்பதில்லை. இப்போது எங்கள் பகுதியை சேர்ந்த குழந்தைகள் பாதுகாப்புடன் பள்ளி செல்கின்றனர். அப்போது தான் புரிந்தது குழந்தையின் குரலுக்கு இவ்வளவு மதிப்பா என்று!!

அன்றிலிருந்து உண்மையாக என்னை பாதிக்கும் விசயங்களுக்கு ஓங்கி குரல் கொடுக்க வேண்டுமென முடிவெடுத்தேன்.



**L. யுவராணி**
12ஆம் வகுப்பு. தண்டையார்பேட்டை

## எனது பங்கேற்பு எனது உரிமை !!

பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு நிர்வாக குழு பயிற்சி 13 ஜூலை 2024 அன்று மதுரையில் சக்தி விடியல் அமைப்பில் நடைபெற்றது. இந்த பயிற்சியில் புதிய நிர்வாக குழு உறுப்பினர்களுடன், பழைய நிர்வாக குழு உறுப்பினர் என்ற முறையில் எனது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள நான் சென்று இருந்தேன்.



புதிய நிர்வாக குழு உறுப்பினர்களுக்கு என் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள என்னை தேர்வு செய்ததில் எனக்கு மகிழ்ச்சி. பழைய நிர்வாக குழுவில் நான் துணை செயலாளராக இருந்து அனைத்துக் கூட்டங்களிலும் என் பங்கேற்பை நான் முழுமையாக கொடுத்தேன். எனது சந்தேகங்களை நான் FPCP இயக்குனர் அனைவரிடத்திலும் கேட்டு தெரிந்து கொள்ளுவேன். FCMRP கூட்டம் என்றாலே எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும். பல்வேறு மாவட்டங்களில் இருந்து எனக்கு அன்பான நண்பர்கள் கிடைத்தனர்.

நான் என் பங்கேற்பை முழுமையாக கொடுக்க வேண்டும் என்று நிறைய புத்தகங்கள் படிப்பேன். நான் கோர்வையாக பேசுவதற்கும், எழுதுவதற்கும் கற்று கொண்டேன். கடந்த மே மாதம் நடைபெற்ற மாநாட்டை ஒருங்கிணைத்து செயல்பட்டு தேர்தல் நடத்தியது, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செய்து அனைவரின் பாராட்டையும் பெற்றேன். தலைமைத்துவம், குழுவாக செயல்படுதல் என்பதை நிறைய கற்று கொண்டேன். இதன் மூலம் என் பள்ளியிலும் நான் சிறந்த மாணவனாக திகழ முடிகின்றது. என் பதவியை விட்டு செல்வது சிறிது வருத்தம் என்றாலும் என்னைப் போன்ற மற்ற குழந்தைகளுக்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று நினைக்கின்றேன்.

எனது அருணோதாயாவின் இயக்குனர் மற்றும் செல்வி மிஸ், சுரேஷ் அண்ணா மற்றும் நான் பங்கேற்க உறுதுணையாக இருந்த அனைவருக்கும் என் அன்பான வணக்கங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.



**G. சந்தோஷ்**
12ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை

# நாங்களே சொந்தமாக குறும்படம் எடுத்தோமா?

ஆமாம் நாங்களே சொந்தமாக ஒரு குறும்படம் எடுத்தது எங்களுக்கே வியப்பாக இருந்தது. எங்களுக்காக குறும்படம் எடுப்பதற்கான பயிற்சியை அருணோதயா ஏற்பாடு செய்தது, நாங்களும் வாய்ப்பை நன்றாக பயன்படுத்தி கொண்டோம். நாங்கள் கற்று கொண்டவற்றுள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

அந்த பயிற்சியை திரு.ஷெரிப் திரைப்பட இயக்குனர் அவர்கள் வழி நடத்தியது எங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருந்தது. மேலும் கோட் பட உதவி சினிமாடோகிராபராக பணியாற்றிய திரு.யுவன், திரு.இராஜஸ்ரீதர் ஆகியோரும் எங்களுக்கு பயிற்சி அளித்தனர்.



பயிற்சி மூலமாக நாங்கள் ஒரு சிறிய குறும்படத்தை இயக்கினோம். பயிற்சி மிகவும் சுவாரசியமாக இருந்தது. வாருங்கள் எங்கள் பயிற்சியில் என்னென்ன நாங்கள் கற்றுக் கொண்டோம் என்பதை உங்களுக்கு விளக்குகின்றேன்.

குறும்படம் பயிற்சி ஆவடியில் உள்ள அன்னனூரில் நடை பெற்றது. வீடியோ படம் எடுப்பதற்கு மிகவும் சிறந்த இடமாக அமைந்தது. மொத்தம் 19 குழந்தைகள் கலந்து கொண்டோம். இரண்டு நாட்கள் பயிற்சி நடைபெற்றது.

முதல் நாள் முதலில் ஒரு விளையாட்டின் மூலம் அனைவரும் அறிமுகப்படுத்திக் கொண்டோம். அதன் பிறகு குறும்படத்திற்கும் டாக்குமென்டரி படத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் என்ன என்பதை கற்றுக்கொண்டோம். அதில் முக்கியமாக குறும் படத்தில் ஒரு கதையை எடுத்து அதை ஒரு குறும்படமாக உருவாக்குவார்கள். ஆனால் டாக்குமென்டரியில் ஒரு உண்மை சம்பவத்தை மட்டுமே படமாக எடுப்பார்கள் என்று இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை கற்றுக் கொண்டோம்.

அடுத்ததாக ஷாட்சைஸ் எப்படி வைக்க வேண்டும், எந்தெந்த ஷாட்க்கு எப்படி ஆங்கில்ஸ் வைக்க வேண்டும் என்பது குறித்து மிகவும் விரிவாக கற்றுக் கொண்டோம். அடுத்ததாக திரைக்கதை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதை கற்றுக் கொண்டோம். ஒரு கதையில் மூன்று முக்கிய விஷயங்கள் இருக்க வேண்டும். ஒன்று அறிமுகம் அது நடிக்கும் கதாபாத்திரங்களின் அறிமுகம் இருக்க வேண்டும். இரண்டாவதாக அது என்ன பிரச்சனையை குறிக்கின்றது? என்ன நன்மைகள் இருக்கிறது என்பதை கோடிட்டு காட்ட வேண்டும். முடிவில் அதற்கு ஒரு முடிவுரை இருக்க வேண்டும். இவை மூன்றும் தான் சிறந்த கதைக்கான அம்சங்கள்.

அடுத்ததாக போட்டோ எடுப்பது எப்படி என்று கற்றுக் கொடுத்தனர். போட்டோ எடுப்பது ஒளியை பிடிக்கும் கலை என்று கூறுவர். லைட்டிங் பற்றியும் கற்றுக் கொண்டோம். இயற்கையாக சூரியன் சந்திரனின் ஒளி உள்ளது, அந்த ஒளியை எவ்வாறு பயன்படுத்துவது என்றும் செயற்கையான ஒளிகள் குறித்தும் விரிவாக கற்றுக் கொண்டோம்.

இரண்டாம் நாளில் இயக்குனர், நடிகர், எடிட்டர், கதை ஆசிரியர் என குழுக்கள் பிரித்து கதைகளை உருவாக்கி அதில் எந்தக் கதையை நாம் படமாக எடுக்கப்போகிறோம் என்பதை முடிவு செய்து அந்தக் கதையை ஒரு குறும்படமாக நாங்களே எடுத்தது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

எங்களாலும் ஒரு குறும்படம் இயக்க முடியும் என்பதை நாங்கள் நம்பினோம். ஒரு பிரச்சனையை எந்த வகையில் குறும்படம் மூலம் எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது என்பதை குறித்து நன்கு தெரிந்து கொண்டோம். இந்த பயிற்சி கொடுத்த இயக்குனர் ஷெரிப் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இந்த பயிற்சியை ஏற்பாடு செய்த எங்கள் இயக்குனர் வர்ஜில் டி சாமி மேடம் அவர்களுக்கும் எங்கள் அன்பான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



**S. ஜிஷ்ணு**
9ஆம் வகுப்பு, எண்ணூர்

# கவிதை தொகுப்பு

போதை மறைக்கும் பாதை
வளர்ந்து வராத பிறையில்லை !
வடிந்து விடாத நுரை இல்லை !
திரும்பி வராத பகல் இல்லை !
திருந்தி விடாத மனமில்லை !
ஒரு நாள் சுவைப்போம் என்று நினைத்தால்
உயிரை சுவைக்கும் ! பொய் இல்லை !
இதை இன்பம் என்பது இழுக்காகும் !
நீ குளித்தால் கங்கை அழுக்காகும் !
போதையற்ற வாழ்வே நிலையான செல்வமாம் !
நிறையான செல்வமே மகிழ்ச்சியான வாழ்க்கை.....,!



**S.** விஷால்
12 ஆம் வகுப்பு. எண்ணூர்

போதை மரியாதையை கெடுக்கும் !
போதை உயர்வை தடுக்கும் !
காசு கொடுத்து வாங்கும் வேதனை போதை!
போதை என்பது மயக்கத்தை உண்டாக்கும் !
போதைப் பொருட்கள் பயன்படுத்துவதால்
அவர்கள் குடும்பம் சீரழியும் !
புகை பிடிப்பதினால் புற்று நோய் உண்டாகும் !
புகையிலை பயன்படுத்துவதால்
நுரையீரல் பாதிக்கும் !
போதை பொருட்கள் உபயோகப்படுத்துவதால்
சமுதாயம் சீரழியும்!
பெரியவர்கள் போதைப் பொருட்கள்
பயன்படுத்துவதனால் சிறுவர்கள் சீரழிவார்கள் !!



வெ. ஆர்யா
8 ஆம் வகுப்பு. எண்ணூர்

தாயையும் தந்தையையும் மறக்கும் போதை !
கட்டிய மனைவியை மறக்கும் போதை !
பெற்ற குழந்தையை மறக்கும் போதை !
எட்டிய உறவுகளை வதைத்திடும் போதை !
சண்டைகளை வளர்த்திடும் போதை !
கட்டிய துணி அவிழ்வது தெரியாது !
கொட்டும் கோவம் அமைவது
புரியாத போதை !
உலகை மறக்கும் போதை !
உணர்வை இழக்கும் போதை !
அறிந்தே இந்த குழியில் விழுகிறான் !
அனைத்தையும் அதிலே புதைக்கிறான் !
மீண்டால் வாழ்வுண்டு ! விழுந்தால் மரணம்
உண்டு !!

**Y.** யாஜித்கான்
7 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை



மது மயக்கத்தில் சிதைந்து போகாதே !
மாறுபட்ட உலகம் உன்னை அழித்துவிடும் !
போதை இல்லா உலகத்தை படைப்போம் !
போதையை பயன்படுத்துவதை அனுமதிக்க
மாட்டோம் !
போதை சாவின் பாதை !!

பிரியதர்ஷினி
11 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை




அன்பின் மேல் போதை கொண்டால்
ஆயுள் கூடும் !
போதை மேல் போதை கொண்டால் அழிவு
கூடும் !
போதைப் பொருள் வாங்க பணம் தேவைப்படும் !
ஆனால் பணம் சம்பாதிக்க கல்வியும் அறிவும்
தேவைப்படும் !
உயிரை உருக்கி உடலை செயலிழக்கவைக்கும்
கொடிய எதிரி போதை !!

க. ஷர்மிளா
11 ஆம் வகுப்பு, திருவொற்றியூர்





S.Dharshan, 9th Std, Kasi Koil Kuppam







R.Shameshraj,
8th Std, A.S.Nagar

உங்கள் படைப்புகளையும், செய்திகளையும், கருத்துக்களையும்
வாழ்த்துக்களுடன் வரவேற்கிறோம்